ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

திருச்சிராப்பள்ளி – 620 020

தமிழாய்வுத்துறை – பெண்கள் பிரிவு

ஆசிரியர் நிகழ்வுகள்

# முக்கூடல்

## தொடக்க விழா

## அறிவிப்பும் அழைப்பும்

நாள் : 05.10.2021 நேரம் : பிற்பகல் 2.15

இடம் : தமிழாய்வுத்துறை (மகளிர்) தன்னிதிப்பிரிவு

**தலைமை**

முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன்
தமிழாய்வுத்துறைத் தலைவர் (பொ) & கலைப்புல முதன்மையர்

வரவேற்புரை : முனைவர் மு.ஹ. ஜஹானாரா

வாழ்த்துரை : முனைவர் க. இக்பால்
தன்னிதிப் பிரிவு பொறுப்பாளர்

முக்கூடலின் முத்துக்களில் - மூவர்

1. முனைவர் பீ. ரசீதா பேகம் இளந்தமிழா!
2. பேரா. எஸ். கௌசியா சுல்தானா ‘பெரிய வீட்டுப் பெண்‘
3. முனைவர் அ. ஜனார்த்தலி பேகம் ‘ரங்கோன் ராதா‘

நன்றியுரை : முனைவர் சு.விஜயலட்சுமி

நாட்டுப்பண்

அனைவரும் வருக! தமிழமுதம் பருக!


TUESDAY
10 05 2021


முக்கூடல்
தொடக்க விழா
நாள்
TUESDAY
10 05 2021


TUESDAY
10 05 2021

05-10-2021 அன்று தமிழாய்வுத்துறையின் பெண்கள் பிரிவின் சார்பாக தமிழ் இலக்கிய மன்றமான **“முக்கூடல்”** தொடக்கவிழா நடைபெற்றது. நிகழ்வின் தொடக்கமாக தமிழாய்வுத்துறைத் தலைவர் கலைப்புல மேன்மையர் முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன் அவர்கள் தொடங்கி வைத்தார். அவரைத் தொடர்ந்து ஆண்கள் சுயநிதிப் பிரிவின் பொறுப்பாளா முனைவர் க. இக்பால் அவர்கள் சிறப்புரையாற்றினார். நிகழ்வின் முதல் உரை முனைவர் பீ. ரசிதா பேகம் அவர்கள் **“இளந்தமிழா”** என்னும் தலைப்பில் இன்றைய இளைஞர்களுக்குத் தேவையான பின்பற்ற வேண்டிய செய்திகளைக் கூறினார். அவரைத் தொடர்ந்து உருதுத் துறையைச் சேர்ந்த உதவிப்பேராசிரியர் சு. கௌசியா சுல்தானா அவர்கள் **“பெரிய இடத்துப் பெண்”** என்னும் உருது நாவல் வழி திருமணம் ஆன பெண்கள் பொறுமையாக இருந்தால் வாழ்வில் நிம்மதியாக வாழலாம் என்பதை சிறப்பாக விளக்கினார். இறுதியாக முனைவர் அ. ஜனார்த்ததலி பேகம் அவர்கள் “**அண்ணாவின் ரங்கோன்ராதா**” கதையினைக் கூறி மூடப்பழக்கவழக்கங்களால் ஏற்படும் தீமையை எடுத்துரைத்தார். இறுதியாக முனைவர் சு. விஜயலெட்சுமி அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது.

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

திருச்சிராப்பள்ளி – 620 020

தமிழாய்வுத்துறை – பெண்கள் பிரிவு

# முக்கூடல்

நாள்: 26.10 2021 நேரம் : பிற்பகல் 1.30

இடம் - தமிழாய்வுத்துறை மகளிர் தன்னிதிப்பிரிவு

**தலைமை**

**முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன்**
**தமிழாய்வுத்துறைத் தலைவர் (பொ) & கலைப்புல முதன்மையர்**

## முக்கூடலில் முத்தமிழின் சுவைகள்

1. பேராசிரியர் ச.செல்வி — சிலப்பதிகாரம் 1,2,3 காதைகள்
2. முனைவர் ச.பார்வதி — சிலப்பதிகாரம் 4,5,6 காதைகள்
3. பேராசிரியர் ரா.ரெஜூலா — சிலப்பதிகாரம் 5,6,7 காதைகள்

**அனைவரும் வருக!**

**தமிழமுதம் பருக!**







26-10-21 அன்று முக்கூடல் இரண்டாவது நிகழ்வு நடைபெற்றது. அதில் உதவிப்பேராசிரியர் ச. செல்வி அவர்கள் சிலப்பதிகாரத்தின் முதல் மூன்று காதைகள் **"மங்கல வாழ்த்துப்பாடல், மனையறம் படுத்த காதை, அரங்கேற்றுக் காதை"** வழி சிலம்பினைப் பற்றிக் கூறி புகார் நகருக்கே நம்மை அழைத்துச் சென்றுவிட்டார். அவரைத் தொடர்ந்து முனைவர் ச. பார்வதி அவர்கள் **"அந்திமாலை சிறப்பு செய் காதை, இந்திர விழவு ஊர் எடுத்த காதை, கடலாடு காதை"** ஆகிய மூன்று காதைகளையும் கூறி இந்திரவிழாவைக் கொண்டாட வைத்தார். இறுதியாக உதவிப்பேராசிரியர் ரா. ரஜீலா அவர்கள் **"கானல்வரி, வேனிற்காதை , கனாத்திறம் உரைத்த காதை"** ஆகிய மூன்று காதைகளையும் கூறி பிரிவின் வேதனையையும் கனாவின் தன்மையினையும் அருமையாக எடுத்துரைத்தார். மூவரின் சொற்பொழிவுடன் விழா சிறப்பாக நடைபெற்றது.

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)

திருச்சிராப்பள்ளி – 620 020

தமிழாய்வுத்துறை – பெண்கள் பிரிவு

# முக்கூடல்

நாள்: 19.11.2021 நேரம் பிற்பகல் 01.30

தமிழாய்வுத்துறை மகளிர் தன்னிதிப்பிரிவு

## தலைமை

முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன்

தன்னிதிப்பிரிவு தமிழாய்வுத்துறைத் தலைவர் (பொ)

வரவேற்புரை : முனைவர் ச.பார்வதி

வாழ்த்துரை : முனைவர் க. இக்பால்
தன்னிதிப் பிரிவு பொறுப்பாளர்

## முக்கூடலின் மூவர்

1 முனைவர் மு.ஹ.ஜஹானாரா 'அன்பின் ஊற்று அன்னை தெரஸா'
2. பேராசிரியர் ம.நித்யகலா 'ஒரு துளி ' கவிதை (ஹிந்தி)
3. முனைவர் அ.ஜான்சிராணி 'எண்ணம் போல் வாழ்வு'

நன்றியுரை : பேராசிரியர் ச.செல்வி

நாட்டுப்பண்

அனைவரும் வருக! தமிழ் அமுதம் பருக!


முக்கூடல்
நாள் : 19/11/2021


முக்கூடல்
நாள் : 19/11/2021

தமிழாய்வுத்துறையின் பெண்கள் பிரிவின் சார்பாக 19.11.2021 அன்று முக்கூடல் கருத்தரங்கம் நடைபெற்றது. பேராசிரியர் சி. பார்வதி வரவேற்புரை ஆற்றினார். முனைவர் க. இக்பால் அவர்கள் தன்னிதிப் பிரிவு பொறுப்பாளர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து முனைவர் மு.ஹ.ஜஹானாரா அவர்கள் **“அன்பின் ஊற்று அன்னை தெரசா”** என்னும் தலைப்பில் அன்பில் வழியில் ஏழைக்கு உதவுவதில் நிம்மதியான வாழ்க்கையை அடையலாம் என்பதை புரிய வைத்தார். அவரைத் தொடர்ந்து ஹிந்தி துறை பேராசிரியர் ம. நித்யகலா அவர்கள் **“ஒரு துளி”** என்ற கவிதை வழி காத்திருந்த ஒரு துளி முத்தான அழகிய கவிதையை தமிழிலும், ஹிந்தியிலும் படைத்தளித்தார். இறுதியாக முனைவர் அ. ஜான்சிராணி அவர்கள் **“எண்ணம் போல் வாழ்வு”** என்ற தலைப்பில் நாம் என்ன நினைக்கிறோமோ அதுவே வாழ்வில் அமையும் என்பதை தனது எண்ணத்தின் வழி அனைவருக்கும் புரிய வைத்தார். இறுதியாக பேராசிரியர் ச. செல்வி அவர்கள் நன்றியுரை வழங்க விழா சிறப்பாக இனிதே நிறைவுற்றது.

தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி 620 020

# முக்கூடல்

நாள்: 04.12.2021 நேரம் பிற்பகல் 01.50

தமிழாய்வுத்துறை மகளிர் தன்னிதிப்பிரிவு

## தலைமை

முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன்
தன்னிதிப்பிரிவு தமிழாய்வுத்துறைத் தலைவர் (பொ)

வரவேற்புரை : முனைவர் அ.ஜான்சிராணி
வாழ்த்துரை : முனைவர் க. இக்பால்
தன்னிதிப் பிரிவு பொறுப்பாளர்

முக்கூடலில் முத்தெடுக்கும் மூவர்

1 முனைவர் சு.இளவரசி : சிலப்பதிகாரம் 10,11,12
2. பேராசிரியர் அ.பரிதா பானு : சிலப்பதிகாரம் 13,14,15
3. முனைவர் கரு.கலையரசி : சிலப்பதிகாரம் 16,17, 18

நன்றியுரை : முனைவர் அ.ஜனார்த்தலி பேகம்
நாட்டுப்பண்

அனைவரும் வருக! தமிழ் அமுதம் பருக!


Pls do Not
ERASE
04.12.2021
4 Dec 2021 2:10:08 pm
Tiruchirappalli
Tamil Nadu


4 Dec 2021 2:23:45 pm
Tiruchirappalli
Tamil Nadu




தமிழாய்வுத்துறையின் பெண்கள் பிரிவின் சார்பாக 04.12.2021 அன்று முக்கூடல் கருத்தரங்கம் நடைபெற்றது. முனைவர் அ. ஜான்சிராணி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். முனைவர் க. இக்பால் அவர்கள் தன்னிதிப் பிரிவு பொறுப்பாளர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். விழாவின் முதல் உரையினை முனைவர் சு. இளவரசி அவர்கள் சிலப்பதிகாரத்தில் **“நாடுகண்காதை, காடுகாண் காதை, வேட்டுவவரி”** ஆகிய மூன்று கதைகளைப் பற்றியும் தெளிவாக விளக்கிக் கூறினார். இரண்டாவதாக பேராசிரியர் பரிதாபானு அவர்கள் **“புறஞ்சேரி இறுத்த காதை, ஊர்காண் காதை, அடைக்கலக்காதை”** ஆகிய மூன்று காதைகளின் வழி மதுரைக்கு அழைத்துச் சென்று விட்டார். அவரைத் தொடர்ந்து முனைவர் கரு. கலையரசி அவர்கள் **“கொலைக்களக்காதை, ஆய்ச்சியர் குரவை, துன்பமாலை”** ஆகிய மூன்று காதைகளைக் கூறி விளக்கினார். இறுதியாக முனைவர் அ. ஜனார்த்தலி பேகம் அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவேறியது.

# தமிழாய்வுத்துறை

ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி 620 020

# முக்கூடல்

நாள்: 09.12.2021 நேரம் பிற்பகல் 01.50

தமிழாய்வுத்துறை மகளிர் தன்னிதிப்பிரிவு

## தலைமை

**முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன்**
தன்னிதிப்பிரிவு தமிழாய்வுத்துறைத் தலைவர் (பொ)

வரவேற்புரை : முனைவர் சு.இளவரசி
வாழ்த்துரை : முனைவர் க. இக்பால்
தன்னிதிப் பிரிவு பொறுப்பாளர்

**முக்கூடலில் முத்தெடுக்கும் மூவர்**

1 முனைவர் அ.ஜான்சிராணி : சிலப்பதிகாரம் (19, 20, 21)
2. பேராசிரியர் கௌசியா சுல்தானா : காரிய நண்பன் ( Shibli Naimani)
3. முனைவர் சு.விஜயலட்சுமி : செல்லாத பணம் (இமையம்)

நன்றியுரை : பேராசிரியர் மு.சர்மிளா பானு
நாட்டுப்பண்

அனைவரும் வருக! தமிழ் அமுதம் பருக!


முக்கூடல்
நாள் 09/12/2021
முனைவர்: அ. ஜான்சிராணி
சிலப்பதிகாரம் [19/20/21]
பேராசிரியர்: S கௌசியா சுல்தானா
[காரிய நண்பன்] உருதுத்துறை
முனைவர்: க. விஜயலட்சுமி
dont ERASE it
9 Dec 2021 2:12:39 pm
Jamal Mohamed College Road
Tiruchirappalli
Tamil Nadu


முக்கூடல்
நாள் 09/12/2021
முனைவர்: அ. ஜான்சிராணி
சிலப்பதிகாரம் [19/20/21]
பேராசிரியர்: S கௌசியா சுல்தானா
[காரிய நண்பன்] உருதுத்துறை
முனைவர்: க. விஜயலட்சுமி
9 Dec 2021 2:32:16 pm
Jamal Mohamed College Road
Tiruchirappalli
Tamil Nadu




தமிழாய்வுத்துறையின் பெண்கள் பிரிவின் சார்பாக 09.12.2021 அன்று முக்கூடல் கருத்தரங்கம் நடைபெற்றது. முனைவர் சு. இளவரசி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். முனைவர் க. இக்பால் அவர்கள் தன்னிதிப் பிரிவு பொறுப்பாளர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நிகழ்வின் முதல் உரையாக முனைவர் அ. ஜான்சி ராணி அவர்கள் சிலப்பதிகாரம் மதுரைக் காண்டத்தில் **“ஊர்சூழ்வரி, வழக்குரை காதை, வஞ்சின மாலை”** ஆகிய மூன்று காதைகளைச் சிறப்பாக கூறினார். அவரைத் தொடர்ந்து உருதுத் துறை பேராசிரியர் கௌசியா சுல்தானா அவர்கள் **“காரிய நண்பன்”** என்னும் தலைப்பில் நல்ல நட்பு, கூடா நட்பு பற்றி அழகாக எடுத்துரைத்தார். இறுதியாக முனைவர் சு. விஜயலெட்சுமி அவர்கள் **“செல்லாத பணம்”** கதையின் வழி பணத்தை வைத்து நிம்மதியைப் பெற முடியாது என்பதை அழுத்தமாகக் கூறினார். விழாவின் முடிவாக பேராசிரியர் மு. ஷர்மிளா பானு அவர்கள் நன்றியுரை நிகழ்த்த இனிதே விழா நிறைவேறியது.

தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி 620 020

# முக்கூடல்

நாள்: 20.12.2021 நேரம் பிற்பகல் 01.50

தமிழாய்வுத்துறை மகளிர் தன்னிதிப்பிரிவு

## தலைமை

முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன்
தன்னிதிப்பிரிவு தமிழாய்வுத்துறைத் தலைவர் (பொ)

வரவேற்புரை : முனைவர் மு.அலிபிநிஷா
வாழ்த்துரை : முனைவர் க. இக்பால்
தன்னிதிப் பிரிவு பொறுப்பாளர்

முக்கூடலில் முத்தெடுக்கும் மூவர்

1. முனைவர் பீ.ரஷிதா பேகம் : சிலப்பதிகாரம் 22,23,24
2. முனைவர் அ.ஜனார்த்தலி பேகம் : சிலப்பதிகாரம் 25,26,27
3. பேராசிரியர் மு.ஷர்மிளா பானு : சிலப்பதிகாரம் 28,29, 30

நன்றியுரை : முனைவர் கரு. கலையரசி
நாட்டுப்பண்

அனைவரும் வருக! தமிழ் அமுதம் பருக!




20/12/2021 02:48 pm

தமிழாய்வுத்துறையின் பெண்கள் பிரிவின் சார்பாக 20.12.2021 அன்று முக்கூடல் கருத்தரங்கம் நடைபெற்றது. முனைவர் மு. அலிபிநிஷா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். முனைவர் க. இக்பால் அவர்கள் தன்னிதிப் பிரிவு பொறுப்பாளர் வாழ்த்துரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து முதலாவதாக பீ. ரஷீதா பேகம் அவர்கள் சிலப்பதிகாரத்தில் ‘‘**அழற்படு காதை, கட்டுரைகாதை, குன்றக்குரவை**’’ ஆகிய மூன்று காதைகளைப் பற்றி சிறப்பாகக் கூறினார். அவரைத் தொடர்ந்து பேராசிரியிர் மு. ஷர்மிளா பானு அவர்கள் **“காட்சிக்காதை, காட்கோட்காதை, நீர்படைக் காதை”** ஆகிய மூன்று காதை வழி கண்ணகிக்கு கோயில் கட்ட கல் எடுத்து செய்தியைத் தெளிவாகக் கூறினார். மூன்றாவதாக முனைவர் அ. ஜனார்த்தலி பேகம் அவர்கள் **“நடுகற்காதை, வாழ்த்துக் காதை, வரந்தரு காதை”** பற்றி சிறப்பாகக் கூறினார். விழாவின் இறுதியாக முனைவர் கரு. கலையரசி அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவேறியது.

# மாணவிகளின் நிகழ்வுகள்

## புத்தக வாசிப்புத் தினம்












06-09-2021 அன்று புத்தக வாசிப்புத் தினத்தை முன்னிட்டு **“நூலின் வலிமையே பட்டத்தின் உயரம்”** என்னும் தலைப்பில் மூத்தப் பேராசிரியர் முனைவர் மு.ஹ.ஜஹானாரா அவர்கள் தலைமையில் விழா துவங்கியது. அதன்பின் முனைவர் மு. அலிபிநிஷா அவர்கள் அறிஞர்கள் வாழ்வில் நிகழ்ந்தவைக் கூறி வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி பேசினார்கள். அவரைத் தொடர்ந்து முனைவர் அ. ஜான்சிராணி அவர்கள் வாடாமல்லி நாவலின் கதையைக் கூறி வாசிப்பின் அவசியத்தை மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார்.

விழிப்புணர்வு நாள்

இணையதள குற்றங்களும் விழிப்புணர்வும்









29-10-21 அன்று மாணவிகளுக்கு **"இணையத்தள குற்றங்களும் விழிப்புணர்வும்"** என்னும் தலைப்பில் சுயநிதிப்பிரிவு ஆண்கள் பொறுப்பாளர் முனைவர் க. இக்பால் அவர்கள் இஸ்லாத்தின் சில நன்மைகள் செய்திகளைக் கூறி நிகழ்வினைத் தொடங்கி வைத்தார். அவரைத் தொடர்ந்து உதவிப்பேராசிரியர் நி. அமீருதீன் அவர்கள் இணையத்தின் வழி ஏற்படும் குற்றங்களை எவை என பட்டியலிட்டு காட்டினார். இணையத்தால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் மாணவிகள் அனைவரும் வியந்து கேட்கும் வகையில் தெளிவாகவும் பொறுமையாகவும் கூறினார். இறுதியாக உதவிப்பேராசிரியர் மு. சர்மிளா பானு அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவுபெற்றது.

பாரதியார் பிறந்த நாள் விழா






தமிழாய்வுத்துறையின் பெண்கள் பிரிவின் சார்பாக 11.12.2021 அன்று **பாரதியார் பிறந்த நாள் விழா** சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. மூன்றாம் ஆண்டு பி.லிட். மாணவி ஷிபானா வரவேற்புரை வழங்கினார். அவரைத் தொடர்ந்து தமிழாய்வுத்துறை தலைவர் முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். முனைவர் க. இக்பால் அவர்கள் தன்னிதிப் பிரிவு பொறுப்பாளர் அவர்கள் வாழ்த்துரை நிகழ்த்தினார். நிகழ்வின் தொடக்க உரையாக முனைவர் அ. ஜனார்த்தலி பேகம் அவர்கள் **“பாரதியின் வாழ்க்கை வரலாறு”** பற்றிக் கூறினார். அவரைத் தொடர்ந்து முனைவர் கரு. கலையரசி அவர்கள் **“பாரதியார் கண்ட புதுமைப் பெண்கள்”** என்னும் தலைப்பில் சிறப்பாக உரையாற்றினார். மூன்றாமாண்டு மாணவி காயத்திரி நன்றியுரை கூற விழா இனிதே நிறைவேறியது.